விமான நிலைய மெட்ரோ ரெயில் நிலையத்தில்

# டெம்போ டிராவலர் இணைப்பு சேவை!

சென்னை, பிப். 26–

விமானநிலையமெட்ரோ ரெயில் முதல் மெப்ஸ் வரை கூடுதலாகடெம்போடிராவலர் இணைப்பு சேவை தொடங்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம மக்கள் பயன்பாட்டிற்கு பல போக்குவரத்து இணைப்புசேவைகளான்ஷேர்ஆட்டோ,ஷேர் டேக்சி, சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்தின் சிறிய பேருந்து சேவை, மெட்ரோசீருந்துஇணைப்பு சேவை, இ–பைக் மற்றும் மிதிவண்டி ஆகியவற்றை சென்னை வாழ் மக்களுக்கு வழங்கிபயணிகள்தங்களது சேருமிடத்தை எளிதாகவும் விரைவாகவும்சென்றுசேர்ந்திட பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

மேற்கண்ட வசதிகளுடன் கூடுதலாக, விமான நிலையமெட்ரோநிலையம் முதல்மெப்ஸ்இணைக்கும் குளிர்சாதனை வசதியுடன் கூடிய டெம்போ டிராவலர் இணைப்பு சேவை, ரூ.20 கட்டணத்தில் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இச்சேவை 30நிமிட இடைவெளியில் இயக்கப்படும்.




சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், ஏற்கனவே விமான நிலைய மெட்ரோ ரெயில் நிலையம் முதல் பம்மல் வரை சென்று வர 5 மெட்ரோ சீருந்து இணைப்பு மற்றும் 1 குளிர் சாதன வசதியுடன் கூடிய டெம்போ டிரர்வலர் இணைப்புசேவைகளையும் விமான நிலைய மெட்ரோ ரெயில் நிலையம் முதல் மெப்ஸ் வரை சென்று வர 4 மெட்ரோசீருந்துஇணைப்பு சேவைகளையும் வழங்கி வருகிறது.

இதனுடன் கூடுதலாக விமான நிலைய மெட்ரோ நிலையம் முதல் மெப்ஸ் வரை சென்று வர 1 குளிர்சாதன வசதியுடன் கூடிய டெம்போ டிரர்வலர் இணைப்புசேவைமெட்ரோ பயணிகளின்பயன்பாட்டிற்காக தொடங்கப்பட்டுள்ளது.